பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

31 DEC 1996
மாநகராட்சி மன்றம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 14 ஞாயிற்றுக்கிழமை (29-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 33

# தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரத முஸ்தீபு!

## இரண்டு வருடங்கள் கழிந்தும் சட்ட நடவடிக்கை இல்லையாம்

கொழும்பு, டிசம்பர் 29

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 23 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும், சட்ட நடவடிக்கை எதுவுமின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களே அடுத்த மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட போது, நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களைத் திகதி குறிப்பிடாது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அவ்வளவு தான். அதன் பிறகு அவர்கள் குறித்து எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமது விடயத்தில் ஜனவரி 19 ஆம் திகதிக்குள் உரிய நடவடிக்கை எடுக்காவிடில் —

அன்று அடையாள உண்ணாவிரதத்தைத் தொடங்கி 23 ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணா விரதமிருக்கத் தாம் முடிவு செய்திருப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினைத் தீர்வு:

## கருத்து உடன்பாடு காண்பதற்கு முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

'அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கருத்துடன்பாட்டைக் காண முழுமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

இப்படிக் கூறினார் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் ''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து நாடாளுமன்றக் குழுவில் கருத்துடன்பாடு ஏற்பட வேண்டும் என்ற வகையில் செயற்படுகிறோம்.

ஐ.தே.க. இந்த விடயத்தில் பெரிய அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

இன்னமும் தமது நிலைப்பாட்டை ஐ.தே.க. வெளியிடவில்லை.

நாம் தற்போது எடுத்துள்ள முயற்சி தோல்வியடைந்தால் சும்மா உறங்கிவிடப் போவதில்லை

மக்களிடம் செல்வோம் அவர்களின் முடிவுப்படி செயற்படுவோம்.

இப்படி அவர் கூறினார்.

கப்பல் மூலம் தருவிக்கப்படும் பொருள்கள்:

## அளவு குறைவதைத் தடுக்குமாறு யாழ். வணிகர் மன்றம் மகஜர்

### ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தது

யாழ்ப்பாணம், டிச. 29

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் தருவிக்கப்படும் பொருள்களின் நிறையும், தொகையும் குறைவதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடில்—

பொருள்களைத் தருவிக்கும் பணியைத் தாம் நிறுத்தப் போவதாக யாழ். வர்த்தகர்கள் யாழ்ப்பாணம் வணிகர் மன்றத்துக்கு அறிவித்துள்ளார்கள்.

இது விடயம் குறித்து யாழ்ப்பாணம் வணிகர் மன்றம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் பொருள்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் போது அளவு குறைவது குறித்து யாழ். அரச அதிபருக்கு உடனுக்குடன் அறிவிக்கப்பட்ட போதிலும், அதனைத் தடுக்க அரச அதிபர் உகந்த நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும் அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரும் பொருள்கள் குறைந்து போவதைத் தடுத்து, வர்த்தகர்கள் யாழ். மக்களுக்குத் தேவையான பொருள்களைத் தருவிக்க [illegible] வணிகர் மன்றம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் பாதுகாவலரின் துப்பாக்கி எங்கே?

கொழும்பு, டிச. 29

அமைச்சர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலரின் ரிவோல்வர் மாயமாக மறைந்து போனது.

தம்புள்ள கலாசார கழக வளவில் நடந்த வைபவம் ஒன்றில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அமைச்சருடன் பாதுகாப்புக்குச் சென்ற மெய்ப்பாதுகாவலர் தமது றிவோல்வரை அங்கு இருந்த மேசை ஒன்றில் வைத்திருந்தார்.

திடீரென அந்த றிவோல்வர் காணாமற் போய்விட்டது.

பின்பு தேடியும் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். (இ-3-150)

முச்சந்தி முரளி



அதிகாரத்தைக் குறைக்கிற தெண்டால் இவை உடனடியாக உடன்பாடு கண்டு விடுவினம் பாருங்கோ...!

## தாண்டிக்குளம்: கிளிநொச்சி வாசி கைது

கொழும்பு, டிச. 29

எட்டு மோட்டார்சைக்கிள் ''செயின்''களை தாண்டிக்குளம் ஊடாகக் கடத்திச் செல்ல முயன்ற கிளிநொச்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புச் சிறையில் 3 இளைஞர்கள் உண்ணாவிரதம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கல்முனையைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் தம்மை விடுவிக்கக் கோரி கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.க்கள் எவராவது சிறைக்கு வந்து தமது விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தால் தாம் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சட்டவைத்திய அதிகாரி கே. கண்ணுத்துரை தினமும் சிறைக்குச் சென்று உண்ணாவிரதிகளின் நிலையைச் சோதித்து வருகின்றார். (இ-3)

## இந்திய ஜனாதிபதியை சந்திரிகா சந்தித்தார்

புதுடில்லி, டிச. 29

இந்தியாவுக்குத் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவைச் சந்தித்து உரையாடினார்.

இலங்கை ஜனாதிபதியை வரவேற்ற இந்திய ஜனாதிபதி இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவும் பொருளாதார முன்னேற்றங்களும் அபிவிருத்தியடைய வேண்டும் எனத் தெரிவித்தார்.

இலங்கையில் இன மற்றும் அரசியல் நிலைமைகள் குறிப்பிடத்தக்களவுசீரடைந்து வருவதாக இலங்கை ஜனாதிபதி தெரிவித்தார். (இ-10)

## ஆசிரியர் நியமனம் அடுத்த ஆண்டில்

கொழும்பு, டிச. 29

கடந்த மார்ச் மாதம் நடந்த ஆசிரியர் சேவைக்கான போட்டிப்பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்து ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம் அடுத்த வருடம் நடைமுறைக்கு வரவிருக்கின்றது.

சேவையில் இருந்து ஓய்வு பெறும் 44/90 சுற்றறிக்கையின் பிரகாரம் 8 ஆயிரத்து 500 ஆசிரியர்கள் இளைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் முறைப்பாடுகள் விசாரணை:

## 23 அரசியல்வாதிகள் சாட்சியமளிக்க அழைப்பு

கொழும்பு, டிச. 29

தேர்தல் முறைப்பாடுகளை ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க 23 அரசியல்வாதிகள், இராணுவ, பொலீஸ் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் முதலாம் திகதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை கனகம்மா

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கனகம்மா 9-12-96 இல் உருத்திரபுரத்தில் காலமானார்.

இவர் தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, சண்முகநாதன் (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), சந்தனராசன் (சுவிஸ்), கிருஸ்ணகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன் (சாவகச்சேரி), பத்மராணி, கிருஷ்ணகுமாரி (ஜேர்மனி), கௌசல்யா (சுவிஸ்), கமலேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் உருத்திரபுரத்தில் உள்ள கோட்டைகட்டிக் குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி. பு. பத்மநாதன்**
(மகள்)

2 ம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(9131)

## முத்துப்பிள்ளை காசிப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துப்பிள்ளை காசிப்பிள்ளை 11-12-96 புதன்கிழமை மாங்குளத்தில் காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, செல்லம்மா, சின்னப்பிள்ளை மற்றும் குட்டிப்பிள்ளை, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாம்பிகை, கந்தசாமி, தேவசாமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சண்முகலிங்கம், இறஞ்சினி, குமணா, குலசிங்கம் ஆகியோரின் மாமனாரும் சத்தியதேவி, சியாமளாதேவி, மஞ்சுளாதேவி, நிர்மலாதேவி, யசோதராதேவி, சசிதரன், சபேசன், சுரேன், துஷ்யந்தி, அனுசியா, தனேஷ், தர்ஷன், தர்ஷா, சஞ்ஜீவன், கேமலதா, மணிவண்ணன், பிரபாகரன், பிரதீபன், பிரதீசன், கேமப்பிரியா, விக்னராஜா ஆகியோரின் பேரனும் நிரோயனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாங்குளத்தில் 12-12-96 வியாழக்கிழமை நடைபெற்றதென்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
**கா. கந்தசாமி**
(மகன்)

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு.
(44383)

## சி. சர்வேஸ்வரக் குருக்கள்

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த சர்வேஸ்வரக் குருக்கள் 27 - 12 - 96 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும் உருக்மணிதேவி, வரதராஜேஸ்வரசர்மா, லலிதாம்பாள், சண்முகானந்தசர்மா, ஜானகி, பிரணதார்த்திகரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் சச்சிதானந்தக்குருக்கள், தாட்சாயினி, காலஞ்சென்ற சாரதாம்பாள், பரமேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-12-96 சனிக்கிழமை சுன்னாகம் மயிலணியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ச. வரதராஜேஸ்வரசர்மா**
(மகன்)

மயிலணி,
சுன்னாகம்.
(சி/3812)

## தியாகலிங்கம் சொர்ணாம்பிகை

தாவடி தெற்கைச் சேர்ந்தவரான தியாகலிங்கம் சொர்ணாம்பிகை 18 - 12 - 96 இல் வவுனிக்குளத்தில் காலமானார்.

அன்னார் தியாகலிங்கத்தின் அன்பு மனைவியும், அழகதாஸ், முருகதாஸ், சுகாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனிக்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**அ. பாலமுருகன்**
(தாவடி)
(ஒன்று விட்ட சகோதரன்)

(C/ 3810)

## சண்முகநாதன் சிவகுமார்

கந்தர்மடத்தைச் சேர்ந்தவரான சண்முகநாதன் சிவகுமார் 25 - 12 - 96 ஆம் திகதியன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி சண்முகநாதன் ஞானாம்பாள் ஆகியோரின் அன்பு மகனும், கமலாதேவி, திருமதி விமலாதேவி பரமேஸ்வரன், காலஞ்சென்ற சாந்தகுமார், திருமதி நிர்மலாதேவி கிறிஸ்தோபர், சகுந்தலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**ச. பரமேஸ்வரன்**
(மைத்துனர்)

20, கந்தப்புராண வீதி,
கந்தர்மடம்.
(9135)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிச. 29

கரவை கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஒளிவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு திரு இருதயக் கல்லூரியில் இடம்பெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய பங்கு மக்களின் ஒளி விழா புனித சூசையப்பர் குருமட மண்டபத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு குருமட அதிபர் அருட் திரு. எட்வின் தலைமையில் நடைபெறும். (இ-30)

## இந்திய மீனவரை காப்பாற்ற கோரிக்கை

சென்னை, டிச. 29

இந்திய மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் துன்புறுத்தி அவர்களது படகுகளைப் பறிமுதல் செய்து வருவதாகவும் —

இதில் இந்திய மத்திய அரசு தலையிட்டு இந்திய மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் — ஜனதாதள் தமிழ்நாடு தலைவர் வி.ஏ. வடிவேலு கேட்டுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தற்போது இந்தியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பிரதமர் தேவகௌடா இப்பிரச்சினை குறித்துப் பேசித் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுள்ளார். (இ-3)

## விமானப்படை சார்ஜன்ட் கைது!

மட்டக்களப்பு வீதி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 30 லட்சம் ரூபா பெறுமதியான வாகன உதிரிப் பாகங்களைக் களவாடினார் என்ற சந்தேகத்தின் பேரில் விமானப் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவரை இரகசியப் பொலீஸார் கைது செய்தனர்.

இக் களவு தொடர்பாக விமானப் படையைச் சேர்ந்த மேலும் எட்டுச் சிப்பாய்கள் தேடப்பட்டு வருகின்றனர் என்று 'லங்கா தீப' தெரிவிக்கிறது. (இ-10)

## வாதுவ புறப்பட்டது

வடமராட்சி, டிச. 29

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்த வாதுவ கப்பல் கொழும்புக்குத் திரும்பிச் சென்றது.

கடல் கொந்தளிப்பு, கடும் மழை காரணமாக இக்கப்பலிலிருந்து பொருள்களை இறக்க ஒரு மாதத்துக்கு மேல் பிடித்தது குறிப்பிடத்தக்கது. (இ-173)

## பளைப்பிரதேச ஓய்வூதியம்

தென்மராட்சி, டிச. 29

கிளிநொச்சி மாவட்ட செயலக ஓய்வூதியப் பிரிவில் ஓய்வூதியம் பெறும் பளைப் பிரதேச ஓய்வூதியர்களின் டிசம்பர் மாதக் கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை பளை ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் வழங்கப்படுமென பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (இ-117)

## விசர் நாய் கடித்து ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 29

இரு மாதங்களுக்கு முன் விசர் நாய்க் கடிக்கு உள்ளாகி ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தைப் போடத் தவறிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் விசர் நாய்க் கடி நோய்க்காளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, நேற்று முன்தினமிரவு மரணமானார்.

நவாலியைச் சேர்ந்த 2 மாதக் குழந்தை ஒன்றுக்குத் தந்தையான [illegible] என்பவரே உயிரிழந்தவராவார். (இ-15)

# மரண அறிவித்தல்கள்

## M. A. பிறேமதாஸா

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த M. A. பிறேமதாஸா நேற்று 28 - 12 - 96 இல் காலமாகி விட்டார்,

அன்னார் திருமதி மேரியேசப்பின் (முன்னாள் மருத்துவ மாது, யாழ். மாநகர சபை) அன்புக் கணவரும், திருமதி தயாபதி ஸ்ரீபன், நவரட்ணராசா (றஞ்சன்), சந்திரரட்ணா, ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், A. ஸ்ரீபன் (ஜெயாஸ் சைக்கிள் சென்ரர்), திருமதி தேவிகா, திருமதி மகாலட்சுமி, திருமதி கலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29-12-96 முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**A. ஸ்ரீபன்**
(மருமகன்)

170, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(சி/3813)

## இராசதுரை இலட்சுமி

கொக்குவில் மேற்கு, கல்திட்டியைச் சேர்ந்தவரான இராசதுரை— இலட்சுமி 27-12-1996 இல் காலமானார்.

இவர் இராசதுரையின் அன்பு மனைவியும், சந்திரபாலன், றஞ்சனாதேவி, நீதிராசா ஆகியோரின் அன்புத்தாயாரும், அனுஷாவின் மாமியும், அகிலதர்ஷன், அகிலசுமன், அகிலேந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29-12-96 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 1 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
**இ.சந்திரபாலன்(மகன்)**
(ஒட்டுமடம் சந்தி மரக்காலை உரிமையாளர்)

கொக்குவில் மேற்கு,
கல்திட்டி,
கொக்குவில்.
(44385)

## திருமதி மனோன்மணி வினாயகமூர்த்தி

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மனோன்மணி வினாயகமூர்த்தி 9-12-96 இல் இலக்கம் 20, செல்வபுரம் வடக்கு, வவுனிக்குளத்தில் காலமானார்.

இவர் நீலியம்பனை மல்லாகத்தைச் சேர்ந்த சி. வினாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், கிரிஷா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவி) அவர்களின் அன்புத் தாயாரும், நாகேஸ்வரி, சுப்பிரமணியம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனிக்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறிறத்தருகின்றோம்.

தகவல்:
**த. சுப்பிரமணியம்**
(சகோதரன்)

ஞானவைரவர் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு.
(44384)

## இம்மானுவல் றோசாரியோ (அரியராசா)

(ஆசிரியர் யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் இல. 15, டேவிட் வீதி, 'பற்றிமாஸ்' ஐப் பிறப்பிடமாகவும் 'விஜயமகால்', மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறுஜோன் இம்மானுவல் றோசாரியோ அவர்கள் 28- 12- 96 அன்று காலமானார்.

அன்னார் றெபேக்காவின் (ஓய்வுபெற்ற ஊழியர் -தபால் தந்தித்திணைக்களம்), அன்புக்கணவரும், காலஞ்சென்ற பேதுறுஜோன் - ஞானம்மா தம்பதிகளின் புத்திரனும், ஜோன் அன்ரன் விக்ரர் (மின் இணைப்பாளர்), ஜோன் பத்திநாதர் (சிங்கம் - மின் இணைப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரி செல்வம், காலஞ்சென்ற பொன்னையா ஆகியோரின் அன்பு மருமகனும், புளோரன்ஸ் (சந்திரா), றிச்சாட் (தட்டெழுத்தாளர்), பெல்ப்ஸ் ஜெகநாதன் (ரெலிகொம்) அன்ரன் விஜயநாதன் (ஹொலன்ட்) ஆகியோரின் மைத்துனரும், அந்தோனிப்பிள்ளை, யமுனாதேவி, சுரதா, சாமளி ஆகியோரின் சகலரும் செப்னா, தபித்தா, டயானா, நிலந்தன், றீனி, ஜோயல், திமொத்தி, யோசுவா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியிலிருந்து 15, டேவிட் வீதி இல்லத்தில் வைத்து அங்கிருந்து திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு புனிதமரியாள் பேராலயத்தில் ஆன்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**பொ. றிச்சேட்**

ஆனைக்கோட்டை.
(44379)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியரை நிரந்தரமாக்குமாறு கோரிக்கை

கொழும்பு, டிச. 29

இரண்டு வருடங்களுக்கு மேலாக பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாகப் பணியாற்றுவோரை நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

3-10-1994 இல் வடக்குக் கிழக்கில் 700 பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் இதுவரையில் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் 1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒருவருட பயிலுநராகக் கடமையாற்றிய ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த நடைமுறை தற்போது பின்பற்றப்படவில்லை. பட்டதாரிப் பயிலுநர்களாகப் பணியாற்றும் சுமார் 700 ஆசிரியர்களையும் நிரந்தரமாக்காதது வேதனைக்குரியது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

இந்த 700 பேரும் தமிழ் - முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-10)

# நடுவூரின் நல்லூற்றாகத் திகழ்ந்த அமரர் பண்டிதர் பொன்னுத்துரை

சமுதாயம் நெறிதவறாதிருக்கச் சான்றோர் வழிகாட்டுவர். அவர் பயனை நாடு பெற்றால் அந்நாடு நாடாகும். இந்த வகையில் நம் நாடு நாடாக இருக்க வழிகாட்டிச் சான்றோர் பலரை உருவாக்கியவர் அமரர் சதாசிவம் பொன்னுத்துரை அவர்கள். அவர் பிற்காலத்திற் பேரறிஞராக நல்ல ஊற்றாக ஊருக்குப் பயன்பட அடித்தளமிட்டவர். தொல்காப்பியத்துக்கு உரை தந்த வித்துவ சிரோமணி கணேசையா.

அவரைக் குருவாகப்பெற்று வரன் முறையாகக் கல்வி பயின்று யா. ஆ. தி. பா. வி. சங்கப் பண்டிதர் பரீட்சையிற் சிறப்புத் தேர்ச்சியடைந்தார். மதுரைத் தமிழ்ப் பண்டித பரீட்சையிலுந் தேறி, முதற்பிரிவிலே அதிக புள்ளிகளைப் பெற்றமையால் பரிசுக்குரியவரானார். இதுபோலவே தென்னிந்திய சைவப்புலவர் முதலாவது தரத்திலே சித்தியடைந்தார்.

இப்பேறுகளால் ஆசிரியப் பதவி வந்தடையவே, ஏற்கனவே நொத்தாரிஸ் பெறுபேறு பெற்றிருந்தும் அத்தொழிலை என்றுஞ் செய்ய நினைக்கவில்லை. சமூக ஒளி விளக்கு, ஆசிரியனே என்பதை உணர்ந்ததின் விளைவு அது.

இவ்வாறு உணர்ந்தும் - உணர்த்தியும் ஆசிரிய மாண்பைக் கடைப்பிடித்தமையால் வட மாகாண ஆசிரிய சங்கம் அவரை மிக நீண்ட காலமாகத் தமது தலைவராக வைத்திருந்து பெருமை பெற்றது. தாய்ச் சங்கமான அகில இலங்கை ஆசிரிய சங்கமும் இவரது தலைமைத்துவப் பண்பைக் கண்டு கொண்டது. தலைவராகப் பெற்று வியந்து மகிழ்ந்தது.

பண்டிதர் அவர்களின் சேவை நாடளாவி விரிந்து செல்கையில், அவரது குழந்தைகள் இருவரும் தாயை இழந்து தவிர்த்தார்கள். அதற்காக அவர் சமூக சேவையைக் கைவிடவில்லை. அதே வேளை அவர் தமது பிள்ளைகளை நன்னிலைக்குக் கொண்டு வந்து நல்ல தந்தையாகவும் இருக்கத் தவறவில்லை.

தந்தையாக, தொண்டனாக, ஆசிரியனாக, அதிபராக கல்விக்காக உழைக்கையில் மாணவர்களின் தேவையை உணர்ந்தார். பாடசாலைகளின் தமிழ்க் கல்வி பூரணமற்றது என்ற நினைவால் பண்டித மாணவர்களின் குருவானார். மல்லாகத்தில் பண்டித வகுப்புப் பொறுப்பாளராக இருந்தது மல்லாமல் பண்டித கழகப் புலவராகவும் இருந்து ஏனைய புலவர்களோடு இணைந்து நூற்றுக் கணக்கான பண்டிதர்களை உருவாக்கினார்.

நல்லாசிரிய இலக்கணம் பொருந்திய வழிகாட்டியான இவர் ''பண்டிதன்'' என்ற சிறந்த மாதச் சஞ்சிகை உலா வரக் கழகத்தாருக்கு உதவினார். போஷகராக இருந்து ஆலோசனை தந்தார். பல ஆண்டுகளின் பின் கழகப் பண்டிதர்கள் தொழில் காரணமாக வெவ்வேறு இடங்களுக்குச் செல்லவே கழகம் சோர்ந்து விட்டது. அதனால் தனது வீட்டிலேயே திண்ணைப் பள்ளி அமைத்து பண்டிதர் பரம்பரையை வளர்த்து வந்தார்.

கற்பித்தலிலே பலவருட அநுபவம் பெற்ற இவரைப் பண்டித பரீட்சகராகத் தலைமைப் பீடம் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டனர். யா. ஆ. தி. பா. வி. சங்கத்தின் ஆலோசகராகவும், உப - தலைவராகவும் காலத்துக்குக் காலம் கடமையாற்றி தான் இறக்கும் வரையும் பணிபுரிந்தார். 79 ஆவது வயதிலுங்கூட இவர் துடிப்பான செயல் வீரராகவே, மறதி எதுவும் இல்லாதவராக, நல்ல உடற் திடகாத்திரத்துடன் இருந்தார். இந்தத் கடமைகளோடு தான் பிறந்து, வாழ்ந்த ஊருக்காக [மட்டுவில்] உழைக்க வேண்டும் என எண்ணிச் சிக்கன உதவிச் சங்கம், பாடசாலை அபிவிருத்தி மாதர் அபிவிருத்திச் சங்கம், ஆலயப் புராணபடனம் என்ற பலவற்றிலும் முன்னின்று உழைத்

## நீத்தார் நயப்புரை

தார். மாதர் சங்கத்துக்காகத் தனது காணியையும் அன்பளிப்புச் செய்தார்.

இவ்வாறு பல்துறைப்பட்ட இவரது சேவை நலத்தினைப் பாராட்டிப் பல்வேறு அமைப்புக்கள் விருதுகளை வழங்கின. அகில இலங்கைக் கம்பன் கழகமும் 1993 ஆம் ஆண்டு இவரது வரலாற்றை வெளிப்படுத்திக் கௌரவித்துப் பெருமை அடைந்தது.

நல்ல புகழுடன் விளங்கும் சிரஞ்சீவிகளான இலக்கண வித்தகர் நமசிவாயம், ஏழாலை மு. கந்தையா, மாவிட்டபுரம் சச்சிதானந்தன் என்போர் இவர் அணியைச் சார்ந்தவர்கள். இவர்களில் மூத்தவர் கணேசையாவின் முதற் தலைமாணவர் இலக்கண வித்தகர் ஆவார். -

ஏனையோருக்கும் நண்பராய், மந்திரியாய், நல்லாசானாய் இருந்தவர் அமரர் பொன்னுத்துரை. இவர்கள் எல்லோரையும் அமரர் புகழ்ந்து பேசுவார். இவ்வண்ணம் நற்சேர்க்கையோடிருந்து நற்தொண்டுகளை எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் ஆற்றிய அமரர் அவர்கள் தான் கண்ட இலக்கண முடிவுகளை நூல்வடிவில் எழுதிவைத்திருக்கிறார். அதனை வெளிக்கொணர்வது தமிழ் அறிந்த உலகின் கடன். எத்தனை சிறப்பிருந்தாலும் அடக்கத்தோடு நடந்துவரும் ஆறுபோல இருந்த இவர் அடக்கமாகிவிட்டார்.

பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்

# வியாழன் மாறியதால் உங்களின் சோதிட பலன் என்ன தெரியுமா?

இம்மாதம் 23ஆம் திகதி வியாழ பகவான் தனு இராசியில் இருந்து மகர இராசிக்கு இடப்பெயர்ச்சி பெற்றார்.

அதனால் பன்னிரு இராசிக்காரர்களுக்கும் உரிய பலன்களை சுருக்கமாகத் தந்திருக்கிறார்

சோதிடர்
கனக. குமாரசுவாமி

**மேட ராசி** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் கால்)

இதுவரை ஒன்பதாம் இடமான பாக்கியஸ்தானத்தில் இருந்தவர் பத்தாம் இடமான ஜீவனஸ்தானத்திற்கு வருகை தருகிறார். சோதிட விதிப்படி பத்தாமிடம் நன்றல்ல மகர ராசியில் குரு நீசமடைந்த பொழுதிலும் இந்த ராசி அன்பர்கள் அச்சப்படவேண்டியதில்லை. குருவானவர் தனது, 5, 7, 9 ஆம் பார்வையினால் குடும்ப, சுகஸ்தான, சத்துரு ஸ்தானங்களை (இவர்கள் ராசியில் இருந்து) பார்வையிடுவதில் விசேட பலன்கள் ஏற்படும்.

குடும்ப நிலையிலிருந்து வந்த பிணக்குகள் நீங்கும். தனச்சேர்க்கை, தொழில் விருத்தி வீடு, வாகனம், நில புலன்கள் சேர்க்கையும், தாயார் உறவினர்வழி முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கல்வி நிலை நன்கு அமையும். வியாபாரிகட்டு ஆதாயம் காணும் நோய்கள் நிவாரணமுண்டு. சத்துருக்கள் சரணடைவர். - வழக்கு வெற்றியும் காட்டும். திசா புத்தி சாதகமானவர்கட்கு இப் பலன்கள் சாதகமாக அமையும். ஏனையோர் கிரக சாந்தி பரிகாரங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

**இடப ராசி** (கார்த்திகை. 2,3,4,ஆம் கால், ரோகிணி, மிருகசீரிடம் 1 ஆம் 2 ஆம் கால்)

இதுவரை எட்டாமிடத்திலிருந்த குருவானவர் 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்துக்கு வந்துள்ளார். சென்ற ஆண்டு இவர்களுக்கு குரு, குறிப்பிடத்தக்க நன்மைகளைச் செய்யவில்லை. காரணம், இராசிக்கு 11 இல் நின்ற சனி, தனது 10 ஆம் பார்வையினால் எட்டாமிடத்தைப்பார்த்தது தான். இப்போது இந்நிலை மாறிவிட்டது. சென்ற வருடம் நடக்காதது இவ் வருடம் நிறைவேறும். குரு ராசியைப் பார்ப்பது தேக சுகமும் தகப்பனார் வழி நன்மையும், நோய் நொடிகள் அகலலும் நீங்கிடப் பெற்று அந்தஸ்து உயரும். பெண்களை பொறுத்தவரை, குழந்தைச் செல்வப் பேறு போன்ற நன்மைகள் விளையும். மாமன் வழி நன்மையுண்டு. பொதுவாக இவ்வருடம் நன்மைகளை எதிர்பார்க்கலாம்.

**மிதுன ராசி** (மிருகசீரிடம் 3, ஆம் 4, ஆம் கால், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, ஆம் கால்)

இதுவரை ஏழாம் இடமான களத்திரஸ்தானமான 7 ஆம் இடத்திலிருந்து வந்த குருவானவர் இனி எட்டாமிடமான அட்டமஸ்தானத்திற்கு வருகிறார். இந்த எட்டாமிடமும் வரக்கூடிய மகரராசியும் இவருக்கு நீசவீடாக இருப்பது விசேஷமானதாகக் கருத இடமில்லை. ஆயினும் கெட்ட பலன்கள் இவர்களை வாட்டிவதைக்க இடமில்லை. காரணம் குருதன் வலிமை ஒடுங்கப்பெற்று நீசனாகப் போனதால், கெட்ட பலன்களுக்கு மத்தியிலும், கடுமையான [illegible] குரு தன் 5 ஆம் பார்வையால் விரயஸ்தானத்தையும், (ராசியில் இருந்து) பார்த்தல், கட்டுக்கடங்காத செலவுகள், கடும் முயற்சியால் முறியடித்தல் இம் முயற்சியில் வெற்றியடைவர். குடும்ப ஸ்தான நன்மை குடும்ப ஒற்றுமைக்கு வழி சமைப்பதாக அமையும். சுப காரியச்செலவுகளுக்குஇடமுண்டு. வாக்கு வன்மையாளர், தரகர்மார், பேச்சின் மூலம் வாழ்க்கையை நடத்துபவர்கள் பொருள் வரவைப் பெறுவர். கண்கள் சம்பந்த நோயாளர் குணமடைய ஏதுக்களுண்டு. இந்த இராசி அன்பர்களின் தகப்பனார் வழி நன்மை, இலாபங்கள் உண்டு. திசா புத்தி நன்றாக அமையாதோர் வியாழபகவானுக்குப் பிரீதி செய்க.

**கடக ராசி** (புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம்)

இதுவரை ஆறாம் இடமான சத்துரு ஸ்தானத்தில் இருந்துவந்த குருவானவர் இனி 7ஆம் இடமான களத்திர ஸ்தானத்துக்கு வருகிறார். இதுவரை துன்பக் கடலில் இருந்தவர்கள் இனி அவ்வாறு அனுபவிக்க வேண்டியதில்லை. இதுவரை சுணக்கமாக இருந்த திருமணம், சுபநிகழ்வுகள் கைவரப்பெறும். குரு 5ஆம் பார்வையாக இலாப ஸ்தானத்தைப் பார்த்தல், செல்வச் செழிப்பு, எதிர்பாராத பண வரவுக்கு இடமுண்டு. மூத்த சகோதர உதவி, தகப்பனார் வழி நன்மை, பூரணமாகக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி நிலை உயர்வுண்டு. சிலர் தூரதேசப் பிரயாணங்கள் செல்லும் வாய்ப்பு ஏற்படும். நோய், துன்பங்கள் நீங்கும். இவர்கள் தொட்டது எல்லாம் துலங்கும்.

**சிங்க ராசி** (மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால்)

இதுவரை, பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் இருந்து வந்த குருபகவான் ஆறாம் இடமான சத்துரு ஸ்தானத்திற்குப் பிரவேசிக்கின்றார். குருவுக்கு இவ்விடம் கூடாத இடம் ஆகும். இந்நேயர்களின் உடல்நிலை, ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்காது. இவ்வருடம் இவர்கள் மத்திமமான பலனையே எதிர்பார்க்கலாம். குரு 5ஆம் பார்வையாக இவர்களின் ராசிக்கு 10ஆம் இடமான தொழில்ஸ்தானத்தைப் பார்வையிடுவதால் இவர்கள் நன்மையடைவர் பதவி உயர்வு, சம்பளஉயர்வுகளுக்கு இடமேற்படும். சத்துரு ஸ்தானத்தில் நீசனாகி 7ஆம் பார்வையால் ராசிக்கு 12ஆம் இடத்தைப் பார்த்தல், கட்டுப்படுத்த முடியாத செலவீனங்களால் கடன்படவும் வேண்டிய சூழ்நிலை உருவாகும். குரு 9ஆம் பார்வையால், குடும்ப ஸ்தானத்தைப் பார்த்தல் குடும்ப ஒற்றுமையில் நல்லுறவு நிலையுண்டு. சிலருக்கு துக்ககரமான சம்பவங்களில் பங்கேற்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சிலருக்கு நெருங்கிய உறவினர்களின் பிரிவுச் செய்தி கிடைக்கப்பெறலாம்.

**கன்னி ராசி** (உத்தரம் 2, 3, 4ம் கால்கள், அத்தம், சித்திரை 1ம் 2ம் கால்)

இதுவரை நான்காவது இடமான சுகஸ்தானத்தில் இருந்த குருவானவர் ஐந்தாம் இடமான புத்திர ஸ்தானத்திற்கு வருகை தருகிறார். ஐந்தாமிடம் குருவுக்கு சுகஸ்தானமும், சாதகமுமான இடமாகும். கடந்த காலப் பகுதியில் துன்புற்றிருந்த, யரமடைந்த அன்பர்கள்ல் துவாழ்வில் தென்றல் வீசப் போகின்றது. செல்வப் பெருக்கான நிலைக்கும், குழந்தைச் செல்வ நிலைக்கும் ஆளாவார்கள். நோயுற்றோர் நலம்பெறுவர். குரு தனது பார்வையை இராசிக்கு, 9, 11 ஜன்ம ராசிகளை நோக்குவதால் தகப்பனார் நலம், தேக ஆரோக்கியம், இலாபம் போன்ற நற்பலன்கள் விளையும். குழந்தைகளின் கல்வி உயரும். சிலருக்கு தொழில் மூலம் நீண்ட தூரப்பயணங்களும், வெளி நாட்டுப் பிரயாணம் போன்ற நற்பேறுகள் நடைபெறும். மூத்த சகோதர உதவி உண்டு. இவ்வாண்டு இவர்களுக்குப் பொற்காலமாக அமையும்.

**துலாம் இராசி** (சித்திரை கடைசிஇருகால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்)

இதுவரை 3 ஆம் இடத்தில் இருந்து வந்த குருபகவான் இனி 4 ஆம் இடத்திற்கு வருகை தருகின்றார். சென்ற வருடம் 3 இல் இருந்த குருபகவான் இந்த ராசிக்குரிய அன்பர்களை சொல்லவொணாத் துயரத்தில் ஆழ்த்தி இருப்பார். தேக சுகம், செல்வாக்கு, நாணயம் எல்லாம் இருட்டு அறையில் மறைந்திருக்கும். சரி, இனி 4 க்கு வந்து நன்மை கிடைக்குமா? என்றால் அதுவும் கேள்விக் குறிதான். இருந்த பொழுதிலும், ஒரு விடயத்தில் ஆறுதல் அடையலாம்.

இதுவரை தனது சொந்த வீட்டில் இருந்து அதிகாரத்துடன் ஆட்சிப் படைத்த குருவானவர் 4ஆம் இடமான மகரத்துக்கு வந்து நீசம்அடைந்து பலவீனப்படுகிறார். துலா ராசியில் சனி உச்சம் பெற்ற பலவானின் ஆட்சி வீடு மகரம். ஆதலால் வியாழனின் தாக்கத்திற்கு இடமில்லை. குருவானவர் துலாராசிக்கு 5 ஆம் பார்வையால் அட்டமஸ்தானத்தையும், 7 ஆம் பார்வையால் தொழில் (ஜீவனம்) ஸ்தானத்தையும், ஒன்பதாம் பார்வையால் விரயஸ்தானத்தையும் பார்வையிடுகிறார். இதன் பயனாக தேக சுகம், ஆயுர் வலுப்படும். பதவி உயர்வுகள், தொழிற் பேறு நடக்கும்.

**விருச்சிக ராசி** (விசாகம் 4 ஆம் கால், அனுஷம். கேட்டை)

இதுவரை இரண்டாம் இடமான தனுராசியில் இருந்து சகல காரியசித்திகளையும், செல்வச் செழிப்பையும் அள்ளித் தந்து இன்ப வெள்ளத்தில் உலாவரச் செய்த குருபகவான், இனி 3ஆம் இடமான தனக்கு வேண்டாத இடமான 3 க்கு வருகை தந்திருப்பது நல்ல சகுனமல்ல. இதனால், சகோதர, சகோதரிகளால் கவலை, உடல் நலக் குறைவு, உறவினர் பகை, போன்ற துர்ப்பலன்களைக் காட்டி நிற்கினும், அதிஷ்டவசமாக, குருதன் பார்வையை 5,7,9, இல் இராசிக்கு 7,9,11 ஆம் இடங்களைக் காண்பது நன்மை தரவல்லது. நீண்ட நாள்கள் இழுபறியில் இருந்த வந்த திருமண விடயம் நன்மையாக முடிவது, குழந்தைப் பாக்கியம், மாமனால் நன்மைகள், நோய்நொடிகளில் இருந்து மீளல், தகப்பன் நிலை உயருதல், உயர் கல்வி வாய்ப்புக்கள், நீண்ட தூரப் பயணங்கள் போன்ற நன்மையான விடயங்கள் ஒப்பேற குருவின் சுபப் பார்வை நன்மையான உதவி புரியும். குருபகவானுக்கு அர்ச்சனை, பிரீதி செய்க.

**தனு ராசி** (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் கால்)

இதுவரை தனுசு ராசியிலேயே அமர்ந்து பல விதமான கஷ்ட நஷ்டங்களைக் கொடுத்து வந்த குருபகவான் இனிமேல் இரண்டாமிடமான மகர ராசிக்கு வருகின்றார். இந்த ஸ்தானம் குருவுக்குச் சாதகமான இடமாக அமைகின்றது ஆகவே,

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள இற்றாலியன் சுப்பர் வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (44334)

### சலவைப்பவுடர்

ஆசிரிய, மாணவ மணிகளே உங்கள் சீருடைகள் வெண்மையாகப் பளிச்சிட நுரைவளம் கூடிய மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவியுங்கள். 450 கிறாம் பவுடர் - 50/-, 10 பெட்டிகள் - 450/- 10 வெற்றுப் பெட்டிகளுக்கு ஒரு உள்ளூர் கைலேஞ்சி பரிசாக வழங்கப்படும். உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு தாருங்கள். ''மில்க்வைற்''. (சி- 3806)

### மணமகன் தேவை

யாழ்.இந்து,கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 23 வயது, ஆயிலியம் 2 பாதம், B. Sc. முதலாம் ஆண்டு படிக்கும் பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், கணக்காளர், விரிவுரையாளர் மணமகன் தேவை. இடைத் தரகர் தேவையில்லை. குறிப்பு, முழுவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும். மே/பா இல. 569, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (44314)

### வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு முதலி கோயில் ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட புது வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: ந. சிவானந்தன், 184A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9120)

### மணப்பெண் தேவை

வவுனியாவில் சொந்தமாக கடை வைத்திருப்பவர். நட்சத்திரம் பூரம். வயது 36. இந்து மகனுக்கு நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்பு: நந்தகோபன், மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகம். (9105)

### வினாத்தாள்கள்

அண்மையில் அரசாங்கத்தால் நடத்தப்பெற்ற O/L English வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்கு விசேட கழிவு. Bond, யாழ்ப்பாணம். (44350)

### கணிதம், ஆங்கிலம்

97 ஆம் ஆண்டில் உயர்ந்த பெறுபேறடைய O/L (ஆண்டு 6 தொடக்கம் 10 வரையும்), Spoken English. வெளிநாடு செல்பவருக்கும் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (44362)

---

**யாழ். பல்கலைக்கழகம் இலங்கை**

முதலாம் பி. எஸ். எம். எஸ்
**1994/95, 1995/96**
கல்வியாண்டு

முதலாம் வருட பி. எஸ். எம். எஸ், **1994/95, 1995/96** கல்வியாண்டு மாணவர்களுக்கான முதலாந்தவணை விரிவுரைகள் எதிர்வரும் **1997-01-06**ம் திகதி சித்த மருத்துவத் துறையில் ஆரம்பமாகவுள்ளன. பதிவு செய்த மாணவர்கள் தவறாது விரிவுரைகளுக்கு சமுகமளிக்கவும்.

**பதிவாளர்**
(சி/3808)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

செல்வன்
**செல்வராசா சுமன் [ கோபு ]**

அன்னை மடியில்: **02 - 07 - 1983**
ஆண்டவன் அடியில் **29 - 12 - 1995**

**திதி: 29 - 12 - 1996**

**எங்கள் அன்புக் குழந்தை சுமன்!**

பாசமுடன் உன்னைப் பெற்றெடுத்து
பாரினிலே எம்மைத் தவிக்க விட்டு —
பரலோகம் சென்றாயோ - எங்கள்
அன்புக் குழந்தையே ......
உன் கள்ளச் சிரிப்பினால்
உன்னைக் காலன் தான் கவர்ந்தானோ ......
ஓராண்டு ஆனாலும் - எமக்கு
நூறாண்டு வந்தாலும் - எம் நெஞ்சமதில்
உதயமாகும் உன் நினைவுகள்.

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

**அப்பா, அம்மா, அன்புச் சகோதரர்கள்.**

அல்வாய் வடக்கு,
அல்வாய். (44368)

---

## பாசமிகு தாயின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சிசிலியா அருளானந்தம்**

தோற்றம்: **07—11—1926**
மறைவு: **29—12—1994**

ஆண்டுகளிரண்டு மறைந்தாலும்,
உங்கள் நினைவுகள் நீங்கிடுமோ அம்மா!
நாம் நினையா வேளையிலே
எமைப் பிரிந்தெங்கு சென்றீர்களோ?
என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிழலாடும்
உங்களின் ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'மாசில்லா மாளிகை'
அச்சுவேலி. (44364)

---

# HY-STYLE

- கேக் ஐசிங் (Cake Iceing)
- திருமணக்கேக் ஐசிங் (Wedding Cake Iceing)
- சீனி மலர் (Sugar Flower)

**புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன**
பெந்தைகோஸ் வீதி (இலங்கை பெந்தை கோஸ் சபை முன்)
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
(44221)

---

## சிவாகி கல்வி நிலையம்

**சாவகச்சேரி.**

**A/L 99 கலை வர்த்தகம்**

ஆரம்பம்: **30 - 12 - 96**
திங்கள் மாலை 2.30 மணி
**வழமையான ஆசிரியர் குழு**
(44374)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: **13 — 07 — 1966**
ஆண்டவன் அடியில்: **10 — 01 — 1996**

**செல்வன் நாகராஜா சிவராஜா**

**திதி: 29 - 12 - 1996**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசமுடன் எங்களை வழி நடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு
சென்றாலும் நாம் உம்மை மறவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார், தங்கை, அத்தான்மார், அண்ணி, பெறாமக்கள், மருமக்கள்.**

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (44351)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: **1914 — 1૭ — 2૭**
மறைவு: **1996 — 11 — 29**

**அமரர் மூத்ததம்பி செல்லத்துரை**
[இளைப்பாறிய தபால் அதிபர்]

**திதி: 29 - 12 - 1996**

எங்கள் மீது அன்புயிராய்த் திகழ்ந்து
அறிவால் பண்பால் எங்களை
வழி நடத்திய எம் தெய்வம்
எம்மை விட்டுப் பிரிந்த போது
எமக்கு உதவி செய்து, ஆறுதல் கூறிய
அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமகன் பேரப்பிள்ளைகள்.**

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். [44331]
தகவல்;- **செ. சண்முகராஜா** [மகன்]

---

# பட்டதாரி ஆசிரியர்கள் தேவை

## வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

கணக்கியல், இந்துநாகரிகம், அளவையியல், உயிரியல் பாடங்கள் க. பொ. த (உயர்தரம்) வகுப்பில் கற்பிக்கக்கூடிய தொண்டர் ஆசிரியர்கள் தேவை.

பட்டதாரிகள், சிறப்புப்பட்டதாரிகள் சான்றிதழ்களுடன் **31 -12 -96** இல் அலுவலகத்துக்கு நேரடியாக வருக.

வயாவிளான் ம. ம. வி.,
உரும்பிராய். (44378)

**ந. [illegible]**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தம் - நிபந்தனையற்ற பேச்சு;
# தென் பகுதியில் கருத்து ஒருமைப்பாடு

இந்த முறை வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது பலர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

வழமையாக தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தவொரு பிரச்சினையைப்பற்றி பேசப்போனாலும் இனப்பிரச்சினையை தொட்டுக் கொள்ளாமல் இருப்பதில்லை.

அதேபோல் அவர்களின் பேச்சுக்கள் எப்போதும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டவை, அதனை நாம் இங்கு குறைகூறவில்லை.

வழமையாகநாட்டின்தேசிய கட்சிகள் என்றழைக்கப்படும் கட்சிகள் இனப்பிரச்சினையைப் பற்றிப் பேசும் போது இரண்டு நாள்களாவது ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதில்லை. இரண்டு கட்சிகளை எடுத்துக் கொண்டால் அவையும் ஒரே நிலைப்பாட்டை கொண்டதாகத் தெரிவதில்லை.

ஆனால் இந்த முறை வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது பல தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் ஏறத்தாழ நெருங்கிய கருத்துக்களையே வெளியிட்டு இருக்கிறார்கள்.

மிக முக்கியமான கருத்தை வெளியிட்டு இருந்தவர் ஜன நாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணியின் நியமன எம். பி. ரவி கருணாநாயக்கா ஆவார்,

### தாக்கம் ஏற்படுத்தும் கட்சி

லலித் முன்னணி என்பது நாட்டின் செல்வாக்குள்ள கட்சியொன்றல்ல. ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கட்சி.

இதேவேளை லலித் முன்னணி ஒற்றையாட்சி அமைப்பை பலமாக வலியுறுத்தும்கட்சியாகும். வடக்கு, கிழக்கு பிரிவினையையும் பலமாக வலியுறுத்தும் கட்சியாகும்.

இந்த நிலையில் ரவி கருணாநாயக்கா முன் வைத்துள்ள கருத்து முக்கியமானதாகும்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றை அனுப்பி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே அவரது கருத்தாகும்.

புலிகளுடனான இந்தப் பேச்சுவார்த்தைகள் எவ்வித நிபந்தனையுமின்றி நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அரசாங்க அதிகாரிகளை அனுப்புவதில் பயனில்லை என அவர் மேலும் கூறி இருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரொனி டி மெல்லும் இதன் ஒத்த கருத்தையே முன்வைத்துள்ளார்.

நிபந்தனைகளுடன் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதில் அர்த்தமில்லை என்றே அவரும் கருதகிறார்.

### வெளிநாட்டு மத்தியஸ்தம்

வெளிநாட்டு மத்தியஸ்தம் பற்றியும் பலர் பேசி இருக்கிறார்கள்.

பிரிட்டன், ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகள் இனப்பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்திருக்கின்றன. அந்த நாடுகளை நாம் ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என ரொனி டி மெல் கேட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் என்ன கூறுகிறார்? மத்தியஸ்தம் வகிக்க விரும்பும் நாடுகளைப் பயன்படுத்தி அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதே.

இந்தக்கருத்துக்கள் ரொனி டி மெல்லினதும், கருணாநாயக்காவினதும் தனிப்பட்ட கருத்துக்களாக இருக்க முடியாது. ஏனெனில் அவர்களின் கட்சித் தலைமை இதுவரை இக்கருத்துக்களை மறுக்கவில்லை.

**கொழும்பிலிருந்து வெளியாகும் "நவமணி" வார இதழில் "புலிகளுடன் பேச வேண்டுமென்பதில் கட்சிகளிடையே ஒத்த கருத்து; யதார்த்தத்தை அரசு உணர வேண்டும்" என்ற தலைப்பில் "பிளேட்டோ" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.**

எனவே நிபந்தனையின்றி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதும், மூன்றாந் தரப்பினரின் மத்தியஸ்தம் வேண்டும் என்பதும் லலித் முன்னணியினதும், ஐ. தே. கவினதும் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்றே கொள்ள வேண்டும்.

பொதுவாக தமிழ்க்கட்சிகள் இந்த இரண்டு கருத்துக்களையும் ஏற்றுக்கொள்கின்றன. அரசாங்க படைகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராகப் போரிட்டு வரும் சில கட்சிகள் மட்டும் இதற்கு முன்னர் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதை அவ்வளவு வரவேற்றதில்லை.

புலிகள் பாஸிஸவாதிகள் எனக் கருதும் அக்கட்சிகள் ஒரு புறத்தில் புலிகளுடன் போரிட்டுக் கொண்டு மறு புறத்தில் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை என இதற்கு முன்னர் கூறியுள்ளன.

அப்படி இருந்தும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ. பி. டி. பி.) யாழ்ப்பாண மாவட்ட எம். பி. ரமேஷ் நடராஜா வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏன் வெளிநாட்டு உதவியைப் பெறமுடியாது எனக் கேட்டுள்ளார்.

இராணுவத் தீர்வு முயற்சிகளுக்கு வெளிநாட்டு உதவி பெறமுடியும் என்றால் அரசியலில் தீர்வு முயற்சிகளுக்கு ஏன் வெளிநாட்டு உதவியைப் பெறமுடியாது என அவர் கேட்டு இருந்தார்.

இதன் அர்த்தம் என்ன? வெளிநாட்டு மத்தியஸ்தத்தை பெறவேண்டும் என்றுதான் அவரும் கூறுகிறார். எதற்காக? யுத்தத்துக்காக அல்ல; அரசியல் தீர்வுக்காகவே. அதாவது புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு என்றே விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

### நிலைப்பாடுகளில் வித்தியாசங்கள்

இந்தக் கட்சிகளின் முன்னைய நிலைப்பாடுகளுக்கும், இப்போதைய நிலைப்பாடுகளுக்கும் இடையே வித்தியாசங்கள் இருப்பதை உணர முடிகிறது.

புலிகள் ஆயுதங்களை முன் வைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தை என நிபந்தனை விதித்த முதலாவது அரசாங்கம் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அல்ல.

முதலாவதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா இந்த நிபந்தனையை விதித்தார். பின்னர் தாமாகவே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி பிரேமதாச அந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த உடன் இந்த நிபந்தனையை விதித்தார்,

அப்போது இன்று லலித் முன்னணியில் இருப்போரும் ஐ. தே. க விலேயே இருந்தனர்.

பரவாயில்லை, இப்போது லலித் முன்னணியினரும், ஐ. தே. க வினரும் நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்கிறார்கள்.

அரசுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போரிடும் தமிழ்க் கட்சிகளும் இராணுவத் தீர்வு வேண்டாம் என்கின்றனர்.

இது போன்ற முரண்பாடுகள் இருந்தாலும் பேச்சுவார்த்தைதான் இறுதித் தீர்வை கொண்டுவரும் என்பதை எல்லோரும் நம்புகிறார்கள் என்பது இப்போது தெரிகிறது.

நாடாளுமன்றத்தில் இப்படி ஏனைய கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கும் வெளியிட்ட கருத்துக்களுக்கும் அரசாங்க தரப்பில் என்ன பதில் கிடைத்துள்ளது?

### அரசின் பதில்

முதலாவதாக நீதி, அரசியலமைப்புத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஒரு கேள்வியை திருப்பிக் கேட்டு இருக்கிறார்.

வெளிநாடுகள் ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் மத்தியஸ்தம் செய்ய முன்வந்த போது ஐ. தே. க. ஏன் அவற்றை பயன்படுத்திக் கொள்ளவில்லை என அவர் கேட்டுள்ளார்.

அடுத்ததாக அவர் கூறுகிறார்; மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்வது நல்ல விடயம். ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவது, அதற்கான நிபந்தனைகள், கால எல்லை என்பன தொடர்பாக ஒரு முன்னேற்பாடு வேண்டும் என்று.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் பேச்சுவார்த்தையை முடிக்க வேண்டும் என்ற இரு நிபந்தனைகளையே அவர் இங்கு மறைமுகமாக முன்வைக்கிறார்.

வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அப்படிஅல்ல. அவர் தமதுபதிலுரையின் போது இந்த நிபந்தனைகளை நேரடியாகவே முன் வைத்துள்ளார்.

புலிகள் கணிசமான ஆயுதங்களை கைவிட வேண்டும், குறித்த காலவரையறைக்குள் பேச்சுக்களை நடத்தி முடிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

வெளிநாட்டு மத்தியஸ்தம் பற்றிப் பேசும் போது அதற்காக அக்கறையுள்ள நாடுகள் இரகசியமாக செயற்படலாம் என அவர் கூறி இருக்கிறார்.

அதேவேளை புலிகளுடன் பேச்சு நடத்தத் தயாராகவே உள்ளோம் எனவும் அவர் கூறி இருக்கிறார்.

இப்படிப் பார்த்தால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எல்லாக் கட்சிகளும் விருப்பமாகத்தான் இருக்கின்றன.

கட்சிகள் மட்டுமல்ல, புலிகளும் கூட பேச்சுவார்த்தைக்குத் தயார். ஆனால் இராணுவம் கைப்பற்றிய பகுதிகளை விட்டுப் போக வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

மாவீரர் வார இறுதியில் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அப்படித்தான் கூறியிருந்தார்

எல்லோரும் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க விரும்புகிறார்கள். ஆனால் அரசாங்கமும் புலிகளும் அதற்காக நிபந்தனை விதிக்கின்றன.

புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்கிறது அரசாங்கம். படையினர் தாம் பிடித்த இடங்களிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும் என்கிறது புலிகள் இயக்கம்.

### நடக்காத காரியங்கள்

இரண்டும் நடக்காத காரியங்கள். எனவே யுத்தத்தை தவிர்க்க இந்த நிபந்தனைகள் அகற்றப்பட வேண்டும்.

தமது நிபந்தனைகள் தொடர்பாக பேசித் தீர்த்துக் கொள்ளத் தயார் என பிரபாகரன் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது அவர் தமது நிபந்தனைகளை தளர்த்தத் தயார் என்பதாகும்.

எனவே இப்போது பந்து அரசாங்கத்தின் பக்கத்திலேயே இருக்கிறது. அரசாங்கத்தின் ஆயுதக் களைவு நிபந்தனை இருக்கும் வரை பேச்சுவார்த்தை நடைபெறப் போவதில்லை.

மறு புறத்தில் உண்மையிலேயே பேச்சு வார்த்தை நடத்த விரும்புவதாக இருந்தால் அதற்காக விதிக்கும் நிபந்தனைகள் யதார்த்த பூர்வமாக இருக்க வேண்டும்.

ஆயுதம் இல்லாவிட்டால் புலிகளே இல்லை. அப்படி இருக்க புலிகள் ஆயுதங்களை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்றால் அது நடக்கக் கூடிய காரியமா?

பேச்சுவார்த்தை தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியென அரசு உண்மையிலேயே நம்புவதாக இருந்தால் இதனை உணர வேண்டும். ★

---

## வியாழன்...

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை இருந்த துன்ப துயரங்கள் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து நன்மைகள் தானாகவே விளையும். எதிரிகள் நண்பராக மாறுவர். இந்த ராசி அன்பர்களுக்கு, குரு ராசிக்கு தன், 5, 7, 9 ஆம் பார்வையால், சத்துரு ஸ்தானத்தையும், அட்டம ஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும் பார்வையிடுகிறார். தேக சுகம், கடன் தொல்லை நீங்கல் தக்க சமயத்தில் நண்பர் உதவிகள் கிடைத்தல் ஆகியவற்றுக்குப் பலன் உண்டு தொழில் சம்பந்தமாக இலாபங்கள், தனச்சேர்க்கை ஏற்படும். தெசாபுத்தி நன்றாக இருப்பின் கூடுதலான யோக பலனுண்டு. ஏனையோர் கிரகசாந்தி, அர்ச்சனை வழிபாடு செய்க.

**மகர ராசி** (உத்தராடம் கடைசி மூன்று பாதங்கள், திருவோணம் அவிட்டம் முதல் இரண்டு பாதங்கள்)

இதுவரைவிரயஸ்தானத்தில் இருந்து வந்த குருபகவான் ராசிக்கு வருகை தருகின்றார். விரயஸ்தானத்தில் இருந்து கஷ்ட நஷ்டங்களைக் கொடுத்து வந்த குரு, இனி ராசிக்கு வருகை தருவது விஷேஷமானதல்ல. இருப்பினும், இவர் நிற்கும் ராசி சனீஸ்வரனின் வீடு. இந்த வீடு குருவுக்கு நீச வீடாக அமைவதால் குருவானவர் நன்மையான பலன்களையே தருவார். பயமில்லை. அதிர்ஷ்டவசமாக குருவின், 5, 7, 9, ஆம் பார்வைகள் ராசிக்கு, பூர்வ புண்ணிய ஸ்தானம், களத்திரஸ்தானம், பாக்கிய ஸ்தானம் ஆகியவற்றில் விழுவது சிறப்பான அம்சமாகும்.

இதனால் பணநிலை உன்னத நிலை அடையும். தொழில் சிறப்பான நிலை காணும். பிள்ளைகளால் நன்மை ஏற்படும். இதுவரை சுணக்கமான சுபகாரியங்கள் நிறைவு பெறும். பெண்கள் மூலமாக அதாவது திருமண மூலம் பணம் சேரலாம். மனைவி உறவு நல்நிலை காணும். செல்வாக்கு உயரும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் கால்கள்)

இதுவரை இலாடஸ்தானத்தில் இருந்து வந்த குருபகவான் இனி விரயஸ்தானத்துக்கு வருகிறார். இதுவரை பணம், கௌரவம், வெற்றி போன்ற நிலை மாறி, சிறிது துன்பநிலை, காரிய தாமதம் ஏற்படினும், இது நிலையாக இருக்காது. சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்பட்டாலும் பாதகமாக அமையாது. குருவின் 5, 7, 9ஆம் பார்வைகள் ராசிக்கு —மாதுருஸ்தானம், சத்துருஸ்தானம் அட்டமஸ்தானம் ஆகியவைகளில் விழுவதால், தாயாரின் நிலை நன்று. நோயிருப்பின் குணமடையும். இவர் மூலம் உதவிகள் கிட்டும். இந்த ராசி அன்பர்களில் சிலருக்கு, வீடு, வாகன வசதி போன்றவற்றைப் பெற இடமுண்டு. விரோதிகளை வெல்லும் சந்தர்ப்பம் ஏற்படும். நோய் நொடி அகலும், மாணவர்களுக்குக் கல்வி உயர்வுண்டு. தெசாபுத்தியை ஆய்வு செய்து, தக்ககிரகபிரீதிசெய்க

**மீனராசி** (பூரட்டாதி 4ஆம் கால், உத்திரட்டாதி, ரேவதி)

இதுவரை 10ஆம் இடத்தில் இருந்து வந்த குருபகவான் இனி, 11ஆம் இடமான இலாபஸ்தானத்துக்கு வருகை தருகின்றார். இதுவரை துன்பப் புயலில் சிக்கித் தவித்தவர்கள், இனிப் புதிய காலத்தில் அடி எடுத்து வைக்கப் போகின்றார்கள். நினைத்தவை நடக்கும். தொழில் இலாபமுண்டு. எக்காரியமும் வெற்றி அடையும். குருவின் 5, 7, 9ஆம் பார்வை, இராசிக்கு, சகோதரஸ்தானம், பூர்வபுண்ணிய ஸ்தானம், களஸ்திரஸ்தானம் ஆகியவைகளில் படிகின்றன. இதனால், சகோதரர் உதவிகள், குழந்தைப் பாக்கியம், மாமனார் உதவிட திருமனம் போன்ற சுபகாரியங்கள், மனைவி மூலம் சொத்துக்கள் போன்றவை அமைய வழிஉண்டாகும். தேகசுசுகம், கௌரவம், புகழுக்குப் பஞ்சமில்லை. தனலாபங்கள், பட்டம் பதவியும் சிலருக்குக் கிடைக்கும். தெசாபுத்திகளை ஆராய்ந்து, இது சாதகமாக அமையாவிடின் நன்மை, தீமை இரண்டும் கலந்தே நடைபெறும். தெசாபுத்தி சரியாக இல்லாதவர்கள் அதற்கேற்ப அர்ச்சனை வழிபாடுகள் செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்ப் பூக்கள்

அறிவு விளக்காய் அன்பின் சுடராய்
குணத்தின் குன்றாய் கற்பித்தலில் நல்லாசிரியராய்
பற்றுடனே வாழ்ந்து இறையடி நாடிய

**யா/ சுன்னாகம்**
**மயிலணி சைவ மகாவித்தியாலய**
முன்னாள் விஞ்ஞான ஆசிரியை

**திருமதி கௌரி சுந்தரமூர்த்தி**

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கை யாக்குகிறோம்.

ஆசிரியர் கழகமும்,
மாணவர்களும்.

சுன்னாகம் மயிலணி சைவ மகா. வி,
சுன்னாகம். (44382)



## உங்களுக்கு சமாதானம் - 1997

**கர்த்தரிடத்தில் வழிகள் உண்டு**

அவரே வில்லை ஒடித்து, ஈட்டியை முறித்து, இரதங்களை நெருப்பினால் சுட்டு, பூமியின் கடை முனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறவர்.

**எஸ்தர் உபவாசநாள்**
**1997 தை 1-3 தினங்கள்**

★ தேசம் குணப்பட ★ சௌக்கிய சேவை சீரடைய
★ அந்தகாரம் நீங்கி தேவகிருபை பெருக

வைத்தியத்துறை கிறிஸ்தவ ஊழியர்களே!
எழும்பி வாருங்கள்

இடம்: சி. எல். எஸ். புத்தகசாலை
(யாழ். போதனா வைத்திய சாலை முன்பாக)

காலம்: 1-1-97-பி. ப. 2.00-பி. ப. 4.00 வரை
2-1-97 - 3-1-97 தினங்களில்
மு. ப. 10.00 - பி. ப. 4.00 வரை

இலங்கை சௌக்கியகரிசனை கிறிஸ்தவ ஐக்கியம்
HEALTHCARE CHRISTIAN FELLOWSHIP OF LANKA
(44354)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



**அமரர் பொன்னையா மயில்வாகனம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியரும், மைலன்ஸ், மலர் ரெக்ஸ் நிறுவனங்களின் உரிமையாளரும்)

மலர்வு: **09-02-1917**
உதிர்வு: **30-11-1996**

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் குலவிளக்காய், ஊர்புகழும் உத்தமனாய், பார்வையில் பரிவும் பாசமும் காட்டி எங்களை மாண்புடன் வளர்த்து வாழ வைத்துவிட்டு மீளாப் பயணம் பெற்ற எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவலைகள் இன்றும் மாறவில்லை.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

5, சிறாம்பியடி,
யாழ்ப்பாணம். (9130)


# பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு சேர்பியாவுக்கு அமெ. அறிவுறுத்து

## அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்கிறது

வாஷிங்டன், டிச. 29

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு சேர்பியத் தலைவர்களுக்கு விடுத்துள்ள கோரிக்கை ஒன்றில் பொறுமையுடன் நடக்குமாறு கேட்டுள்ளது.

பெல்கிரேட்டில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வரும் இவ்வேளையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

6 வாரங்களாக அங்கு எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள்.

பலவாரங்களாக அமைதியாக நடந்த ஆர்ப்பாட்டம் அரசாங்கத்தின் ஆத்திர மூட்டும், பொறுப்பற்ற செயல்கள் காரணமாக வன்முறை ஆர்ப்பாட்டங்களாக மாறியுள்ளன என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு பேச்சாளர் ஜோன் லிங்கர் தெரிவித்தார். (இ-3)

## ஜோன் மேஜர் பங்களாதேஷ் செல்வார்

லண்டன், டிச. 29

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் அடுத்த மாதம் பங்களாதேஷுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பங்களாதேஷ் பிரதமரின் அழைப்பின் பேரில் அவர் 3 நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அங்கு செல்கிறார்.

18 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரிட்டிஷ் பிரதமர் ஒருவர் முதல் தடவையாக பங்களாதேஷுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடைசியாக 1978 ஆம் ஆண்டு அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் ஜேம்ஸ் கலகன் விஜயம் செய்திருந்தார். (இ-3)

## உணவு உண்ட 190 சிறுவர்கள் சுகவீனம்

சென்னை, டிச. 29

நத்தார் தினத்தன்று சென்னையில் நத்தார் உணவு உட்கொண்ட 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட விடுதி ஒன்றைச் சேர்ந்த 190 சிறுவர்கள் சுகவீனமுற்று மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வாந்திபேதி நோய் ஏற்படவில்லை என்றும் —

தண்ணீர் மூலம் இவர்களுக்கு இந்த நோய் ஏற்பட்டிருக்கலாம் என்றும் —

அடுத்த இரு தினங்களில் இவர்கள் சுகமடைந்து விடுதி செல்ல முடியும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## மார்ட்டின்லூதரை கொன்றவர் மயக்க நிலையில்

வாஷிங்டன், டிச. 29

அமெரிக்க கறுப்பு இன மக்களின் விடுதலை வீரர் மார்ட்டின் லூதர் கிங்கைக் கொலை செய்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு 99 வருட சிறைத் தண்டனை அனுபவித்து வரும் றோய் என்பவன் நுரையீரல் நோய் காரணமாக மயக்க நிலையை அடைந்துள்ளான்.

1968ஆம்ஆண்டு மார்ட்டின் லூதர் கிங் படுகொலை செய்யப்பட்டார். (இ-10)

## இஸ்ரேல் ஜனாதிபதி இந்தியா வருகிறார்

ஜெருசலம், டிச. 29

இஸ்ரேலிய ஜனாதிபதி ஈஸெர் வீய்ஸ்மான் இன்று இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்.

இஸ்ரேலிய ஜனாதிபதி ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை ஆகும். இரு நாடுகளினதும் உறவுகளை வலுப்படுத்துவதே இந்த விஜயத்தின் இலக்கு என கூறப்படுகிறது.

வீய்ஸ்மான் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் பிரிட்டிஷ் றோயல் விமானப்படை அதிகாரியாகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 5 தூதுவர்கள் உட்பட 103 பேர் இன்னும் போராளிகள் பிடியில்

லீமா, டிச. 29

பெரு நாட்டின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதரின் இல்லத்தில் பிடித்து வைத்துள்ள பணயக்கைதிகளில் பெருவுக்கான கௌதமாலா நாட்டுத் தூதுவரை போராளிகள் விடுதலை செய்துள்ளனர்.

இன்னும் 103 பேர் பணயக்கைதிகளாக உள்ளனர். இதில் 5 தூதர்களும் அடங்குவர்.

சுமார் 9 நாள்களாக போராளிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த கௌதமாலா தூதுவர் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் இயக்குநருடன் எவ்வித அறிவிப்பும் இன்றி வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சீதாராம் கேசரியை ஏகமனதாக தெரிவு செய்வதற்கு முயற்சி

புதுடில்லி, டிச. 29

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றத்தில் குழுத்தலைவர் தெரிவு எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறும் போது ஏகோபித்த கருத்தாக தற்போதைய காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியைத் தெரிவு செய்ய முயற்சி நடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவிக்கு போட்டியிட பலர் முன்வந்த போதும் சீதாராம் கேசரிக்கே ஆதரவு அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)


## திருவாசகம் முற்றோதல்

இடம்: **மயிலணி வடக்கு, சுன்னாகம்**
**அண்ணா மகேஸ்வரர் ஆலயம்,**
சுன்னாகம்.

காலம்: **29-12-1996 காலை 6 மணி**

ஆலய திருப்பணிச் சபை.

(9129)



## ராகவன் கல்வி நிலையம்

**பலாலி வீதி, உரும்பிராய்.**

**A/L 99, 98, 97 கலை, வர்த்தகம்**

ஆண்டு 6 தொடக்கம் O/L வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன.

| A/L | | O/L | |
|---|---|---|---|
| பொருளியல் | — சண் | கணிதம் | — நகுலன் |
| கணக்கியல் | — கொலின் | விஞ்ஞானம் | — சுதாகர், சுரேஸ் |
| வர்த்தகம் | — முரளி | தமிழ் | — ஆர்திகன், விஜே |
| புள்ளிவிவரவியல் | — தயாளன் | சமூகக்கல்வி | — மகேஸ், விஜே |
| அளவையியல் | — ஆதவன், சர்மா | சமயம் | — பாஸ்கர் |
| தமிழ் | — ஆர்திகன் | ஆங்கிலம் | — மௌலி |
| நாடகம் அரங்கியல் | — சுகந்தன் | வர்த்தகம் | — சிவா |
| இந்துசமயம் | — சிவானந்தன் | | |
| இந்துநாகரிகம் | — சிவமாகலிங்கம் | | |

விசேட ஆங்கில வகுப்பு 1996-12-29 காலை 9 மணிக்கு
A/L 99 வகுப்புகள் 03-01-97 வெள்ளி மாலை 3 மணிக்கு
(44380)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சளையாத திருடர்கள்

மக்கள் மீளக் குடியமராத வீடுகளில் இருந்து ஓடுகள், நிலைகள், கதவுகள், போன்ற பொருள்களைத்திருடியதாகக் கூறப்படுவோர் கிராம சேவை அலுவலர் ஒருவரிடம் பிடிபட்டிருக்கின்றனர். வலிகாமம் தென்மேற்குப் பிரிவில் உள்ள ஓர் ஊரில் இது நடைபெற்றிருக்கின்றது.

வலிகாமம் தென்மேற்கில் மட்டுமன்றி யாழ்ப்பாண நகரம் உட்பட வலிகாமம் பிரதேசம் முழுவதிலுமே இத்தகைய சம்பவங்கள் இன்னமும் நாளாந்தம்நடைபெற்ற வண்ணமே உள்ளன.

வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்ற வலிகாமம் பிரதேச மக்களில் கணிசமானோர் இன்னமும் தமது வீடுகளுக்குத் திரும்பவில்லை; மீளக் குடியமரவில்லை. இதே போல கொழும்பு மற்றும் வெளி நாடுகளுக்குக் குடும்பமாகக் குடிபெயர்ந்தவர்களின் வீடுகளும் வசிப்பதற்குஆளின்றி வெறிச்சோடி உள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள், குடியிருப்போர் இல்லாத வீடுகளில் பொருள்களைக் களவாடுகிறார்கள். இந்தத் திருடர்களில் இரண்டு வகையினரைக் காணமுடிகிறது.

மற்றவர்களின் பொருள்களை அபகரித்து அவற்றைத் தமது உடைமைகள் ஆக்கிக் கொள்வோர் முதலாவது வகையினர். இவர்கள் இடம் பெயர்வுச் சூழ்நிலை தோற்றுவித்த புதிய திருடர்கள்.

குடியிருப்போர் இல்லாத மனைகளில் பெறுமதியான பொருள்களைக் களவாடி அவற்றை வேறு பகுதிகளுக்குக் கொண்டு சென்று விற்போர் இரண்டாவது வகையினர். இவர்கள் திட்டம் போட்டுத் திருடும் தரப்பினர்; திருடுவதையே தொழிலாக கொண்டவர்கள்.

இவர்கள் எல்லோருமே தாம் களவாடும் வீட்டுச் சொந்தக்காரரின் உறவினர்கள், நண்பர்கள் என்று கூறி அயலில் உள்ளவர்களைப் பயமுறுத்தி, நாட்டாண்மை காட்டி பகற் கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

தங்களைத் தட்டிக் கேட்க ஆளில்லை; சண்டித்தனம் காட்டி மற்றவர்களின் உடைமைகளைக் கபளீகரம் செய்வது இலகு என்ற நினைப்புடனேயே இந்த மாபெரும் சமூகக் குற்றத்தை, சமூகத் துரோகத்தை அவர்கள் துணிவுடன் செய்து வருகிறார்கள். ஓயாது, களைக்காது, சளைக்காது 'சாதனை' படைக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் வந்து குடியமர்வதற்கு அவர்களின் குடியிருப்புகளையே அடையாளம் காண முடியாதவாறு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள்.

மற்றவர்களின் அவலத்தையும், கஷ்டத்தையும் உணராது அவர்களின் உடைமைகளைச் சூறையாடும் சமூக விரோதப் போக்கு எங்கள் மக்களை மேலும் சீரழிக்கப் போகிறது.

இதனைக் கட்டுப்படுத்தவும், களையவும் இன்றைய சூழ்நிலையில், கிராம சேவை அலுவலர்கள் போன்ற சிவில் அதிகாரிகளே பெரிதும் உழைக்க வேண்டும். நொந்து போயுள்ள மக்களின் உடைமைகளைக் காப்பாற்றுவதைத் தமது கடமையாக மட்டுமன்றி பெரும் தொண்டாகவும், புண்ணியமாகவும் நினைத்துப் பணியாற்ற வேண்டும். சமூகப் பற்றாளர்கள் இவர்களுக்கு உதவ வேண்டும்.

# கிராமசேவையாளர் போட்டி பரீட்சை
# மண்டபம் திடீரென இடம்மாற்றம்!

## பரீட்சை தாமதித்தே ஆரம்பமானது

வடமராட்சி, டிச. 29

கிராம சேவையாளர் தரம் இரண்டிற்கான போட்டிப் பரீட்சைக்கான பரீட்சை மண்டபம் திடீரென இடம் மாற்றம் செய்யப்பட்டது.

பருத்தித்துறை நகரில் இப் போட்டிப் பரீட்சைக்கான மண்டபங்களில் ஒன்றாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை இம் மண்டபத்துக்கு வந்திருந்த நூற்றுக் கணக்கான பரீட்சார்த்திகள் பரீட்சைமண்டப நுழைவாயிலில் உள்ள பாதுகாப்புப் படையினரிடம் தமது தேசிய ஆள் அடையாள அட்டையைப் பதிவு செய்து விட்டு பரீட்சை மணடபத்துக்குச் செல்வதற்காக வெளியில் காத்து நின்றனர்.

இந்நேரம் பரீட்சை மண்டபம் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக அங்கு குழுமி நின்ற பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சைமேற்பார்வையாளர்கள் அறிவித்தனர்.

இதனையடுத்துப் பரீட்சார்த்திகள் அவசரம் அவசரமாக சுமார் 300 யாருக்கு அப்பாலுள்ள பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றனர்.

திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட பரீட்சை மண்டபமான பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில், திட்டமிட்டதற்குப் பதிலாக சுமார் ஒன்றரை மணி நேரம் தாமதித்தே பரீட்சை ஆரம்பமாகி நடைபெற்று முடிவடைந்தது. (இ-173)

## மேல் மாகாணத்தில் முதலில் தேர்தல்

கொழும்பு, டிச. 29

உள்ளூராட்சித் தேர்தல்கள் முதலில் மேல் மாகாணத்திலேயே நடைபெறலாம் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## பளைப்பகுதி உதவிப்பணம்

தென்மராட்சி, டிச. 29

பளைப் பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் டிசம்பர் மாதக் கொடுப்பனவுகளை நாளை திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாமெனவும் —

கொடுப்பனவுக்கான காசோலைகளும் பட்டியலும் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும்—பிரதேச செயலக நிதிப்பிரிவினர் தெரிவித்தனர். (இ-117)

## தேசிய அடையாள அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தன

நவாலி, டிச. 29

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் 2 ஆயிரத்து 500 பேரின் அடையாள அட்டைகள் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-100)

## சுன்னாகம் மத்திய சந்தை மீண்டும் இயங்க ஆரம்பம்

சுன்னாகம் மத்திய சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாக வலி-தெற்கு விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மக்கள் பாவனைக்கு இச் சந்தை திறக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள், விவசாயிகள், வரியிறுப்பாளர்கள் ஆகியோர் உடனடியாக வியாபாரத்தை ஆரம்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (இ-3)

## கருவாட்டுக்குப்போட்ட இறாலை உட்கொண்ட சிறுமியர் சுகவீனம்

யாழ்ப்பாணம், டிச. 29

பழுதடைந்த இறால் சாப்பிட்ட இரண்டு சிறுமிகள் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டு யாழ. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி, தனங்கிளப்பு வீதிப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சகோதரிகளான அம்பிகாபதி சோபினா (வயது 10), அம்பிகாபதி றோபினா (வயது 4) ஆகியோரே பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

கருவாடு போடுவதற்காக பழுதடைந்த இறாலை அவித்துக் காயவிடப்பட்டதாகவும் — அந்த இறாலில் சிலவற்றை இரு பிள்ளைகளும் சாப்பிட்டதாகவும்— கூறப்படுகிறது. இதனைச் சாப்பிட்ட இருவரும் வாந்திபேதியினால் பாதிக்கப்பட்டு மயக்க நிலையை அடைந்தனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு இவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். (இ-15)

### சாந்திகுமார் கொலை:

## பொலீஸ் அதிகாரி உட்பட மூவருக்குப் பிணை மறுப்பு

கொழும்பு, டிச. 29

தமிழ் யூனியன் கிரிக்கெட் குழுவின் முன்னாள் தலைவரும் பிரபல தொழிலதிபருமான சாந்திகுமார் கொலை தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களான வெலிக்கடை பொலீஸ் நிலையப் பொறுப்பாளர் இன்ஸ்பெக்டர் பாலித சிறிவர்த்தன மற்றும் தினேஸ் இந்திக சில்வா, சியாணிபுக்வெல்ல ஆகிய மூவரையும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்ற நீதிவான் கடந்த வெள்ளியன்று உத்தரவிட்டார்.

இம்மாதம் 7 ஆம் திகதி கொழும்பு அன்டர்சன் கோல்வ் விங் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சாந்திகுமாரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றது தெரிந்ததே. (இ-10)

# நாம் புதுவாழ்வு பெறுவதற்காக எம்மைத் தூய்மைப் படுத்துவோம்

இறைவன் எங்களை சுதந்திரமும் அன்பும் பொறுப்பும் உள்ள வாழ்வுக்கு அழைக்கின்றார் — மீட்பின் வரலாறு இந்த அழைப்புக்குச் சான்று பகர்கின்றது. இறைவனிடம் நட்புக் கொள்ள நாம் பெறும் அழைப்பு இது. அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரயேல் மக்களை அக்காலத்தில் இறைவன் பராமரித்து வந்தது போல இப்பொழுது எம்மையும் பராமரித்து வருகின்றார். அவரில், முழுமையான நம்பிக்கை கொள்ளுவதும் அவரது நண்பர்களாக இருக்க விரும்புவதும் எமது பங்காகும். கிறிஸ்து திருச்சபையின் வழியாக எங்களை அழைக்கின்றார். எங்களை மட்டுமன்றி மற்றும் ஏனையோரையும் அழைக்கின்றார். அவரின் அழைத்தலுக்கேற்ப நாம் வாழ்ந்தால் மகிழ்ச்சியும் விடுதலையும் பெறுவோம்.

நாம் சிறப்பான சமுதாயம் ஒன்றின் உறுப்பினர்கள். இச் சமுதாயம் எமக்குச் சுதந்திரத்தையும் அன்பையும் பொறுப்புணர்ச்சியையும் தருகின்றது. புதுவாழ்வையும் உண்மையான மகிழ்ச்சியையும் நாம் அடைவதற்கு இச்சமுதாயம் துணை புரிகின்றது. அன்பின் சமுதாயமான இதுவே கிறிஸ்துவின் திருச்சபையாகும்.

திருச்சபை எமக்கு விடுதலை அளிக்கின்றது. தன்னலத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் எம்மை விடுவிக்கின்றது. தப்பறையான போதகத்தில் நாம் சிக்காமலும் பிழையான வழிபாட்டில் ஈடுபடாமலும் தடுக்கின்றது. அறியாமை, பிணி, அவிசுவாசம், சந்தேகம், மரணபயம் என்னும் கட்டுப்பாடுகளிலிருந்து எமக்கு விடுதலை அளிப்பது திருச்சபையாகும். திருச்சபைத் தாய் எம்மைப் பாவத்திலிருந்து மீட்கின்றாள்.

இறைவனில் இருந்தும் உடன் வாழ்வோரில் இருந்தும் மனிதனைப் பிரித்து வைப்பது பாவம் என்பதை நாம் அறிவோம். திருச்சபை வழங்கும் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) வழியாக நாம் இறைவனின் பிள்ளைகள் ஆகின்றோம். சகோதரத்துவத்தை எமக்கு ஊட்டுவது திருச்சபை ஆகும். பாவ மன்னிப்பு என்னும் திருவருட் சாதனத்தால் எம்மைத் தூய்மையாக்கி எமது மீட்பராகிய கிறிஸ்துவுடன் அறிமுகமாகின்றது.

இன்னும் எமது இறுதிப் பயண வேளையில் நோயின் அவஸ்தைப் பூசுதல் வழியாக எம்மைப் புனிதப்படுத்துவதுடன் உடன் சுகத்தையும் அளிக்கின்றது. இவை அனைத்தும் எமக்கு ஆன்ம வலுவை அளிக்கின்றன. தூய ஆவியானவர் எம்மில் செயலாற்றுகின்றார்.

தூய ஆவியின் அருள் பெற்ற நாம் கிறிஸ்துவைப் போல் தந்தையாம் இறைவனையும் எம் அயலவரையும் அன்பு செய்யும் ஆற்றலைப் பெறுகின்றோம். தன்னலத்திலிருந்து நாம் விடுதலை அடைகின்றோம் என்பது இதனால் விளங்குகின்றது.

இறைவனின் அன்பை மற்றவர்களுடனே பகிர்ந்து கொள்ளும் முறையை திருச்சபைத் தாய் எமக்குக் காட்டுகின்றாள். நாம் அனைவரும் பங்கு கொள்ளும் திருவிருந்து சகோதரத்துவத்தின் அப்பமாகும். அன்பினதும் பரிவினதும் அப்பம் இதுவாகும்.

நல்ல சமாரியன் உவமை வழியாகக் கிறிஸ்து எம் அயலார் மட்டில் நாம் கொள்ள வேண்டிய கடமை பற்றி விளக்கியுள்ளார். உடன் வாழ்வோரின் தேவைகள் குறித்து விழிப்புள்ளோராய் நாங்கள் வாழ்தல்வேண்டும். அவர் எம்மை அழைக்கின்றார், தமது திருச்சபை வழியாக அவர் செயற்படுகின்றார். பலி வாழ்வு வாழத் திருச்சபை எம்மை அழைக்கின்றது. இவ்வித பொறுப்புக்களை வகிக்க எம்மை அழைக்கும் திருவருட்சாதனங்களாக உறுதி பூசுதல், குருத்துவம், திருமணம் என்பன அமைகின்றன. திருவருட் சாதனங்கள் புது வாழ்வுக்கு எம்மை அழைத்துச் செல்கின்றன. ★

- வி. பிரான்சிஸ்

## ஞாயிறு நற்பிரசாதம்

## நாளை

**மார்கழி 13**

**திங்கட்கிழமை**

**திதி:** பஞ்சமி முற்பகல் 11.46 வரை.

**நட்சத்திரம்:** மகம் முற்பகல் 8-38 வரை.

**ராகுகாலம்:** 7.59 - 9.29

**சுபநேரம்:** 12.29 - 1.59

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிச. 29

சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இன்று காலை 6 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம் பெறவிருக்கிறது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி, செயலாளர் சி. சக்திகிரீபன் ஆகியோர் விசேட உரையாற்றுவர். (இ-3)

## சாரதாதேவி ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், டிச. 29

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியாரின் 144 ஆவது ஜெயந்தி விழா திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் ஜனவரி முதலாம் திகதி நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளாக மங்கள ஆரத்தி, விசேட பூசை, அமுதமொழிகள், பூசை, பிரசாதம் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகளாக பஜனை மற்றும் கல்விமான்களின் பேருரைகள் இடம் பெறும்.

வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து கொழும்பு இராமகிருஷ்ணமிஷனின் உதவியுடன் நிவாரணமும் அன்று வழங்கப்பட உள்ளது. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாலகங்களுக்கு குறியீட்டு இலக்கம்

நாடெங்கிலுமுள்ள 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட தபாலகங்கள் மற்றும் உப—தபால் நிலையங்கள் ஆகியவற்றுக்குரிய குறியீட்டு இலக்கங்களைக் கொண்ட விவரக் கொத்து ஒன்றை தபால் திணைக்களம் வெளியிட்டுள்ளது

சகல தபாலக கருமபீடங்களிலும் இந்த விவரக் கொத்தை 5 ரூபா செலுத்திப் பெறலாம் என்று தபால் மா அதிபர் கொட்டதெனிய தெரிவித்தார்.

தபால் தரம் பிரிக்கும் பணிகளை கம்பியூட்டர் மயமாக்கும் நடவடிக்கைக்கு முன்னோடியாக இந்தத் தபால் குறியீட்டு இலக்கம் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (இ—3)


**BEACON**

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(உப- தபால் கந்தோருக்கு அருகில்)

**A/L 97, 98, 99**

ஆசிரியர் குழு

★ பொருளியல் — திரு. அன்ரனி
★ வர்த்தகம் — திரு. பசில்
★ அளவையியல் — திரு. சயந்தன்
★ இந்துநாகரிகம்
★ இந்துசமயம் — திரு. ஜோதீஸ்வரன்
★ கணக்கியல் — பிரபல ஆசிரியர்
★ வணிக புள்ளிவிபரவியல் — திரு. திரிகரன்
★ அரசியல் — திரு. பஞ்சு
★ நாடகமும் அரங்கியலும் — திரு. கந்தவேள்
★ தமிழ் — பிரபல ஆசிரியர்
★ புவியியல் — பிரபல ஆசிரியர்

ஆரம்பம்:- 1 - 1 - 97
புதன் 9. 00 A. M.

(சி/3811)



**பதவி வெற்றிடம்**

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் பாலர் பாடசாலைக்கு ஆசிரியை தேவை. தகுதியானவர்கள் **"கரன் ரெக்ஸ்ரைல்ஸ் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி"** என்ற முகவரிக்கு 02 - 01 - 97 க்கு முன் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 04 - 01 - 97 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறும். சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டாது.

செயலாளர்
கலா மன்ற சனசமூக நிலையம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு. (9133)



**கண்ணீர் அஞ்சலி**

எமது சக மாணவி
செல்வி ம. பாலஜினியின் தந்தையார்
**திரு வே. மயில்வாகனம்** அவர்களது

மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ், யூனியன் கல்லூரி,
(96) வர்த்தகப்பிரிவு மாணவர்கள்.
(44386)



**கண்ணீர் அஞ்சலி**

பேதுரு யோன் இமானுவல்
றொசாயிரோ

(ஆங்கில ஆசிரியர், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்)

28-12-96 அன்று இறைவனடி சேர்ந்த எமது சக ஆசிரியர் **P.J.E. றொசாயிரோ** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவர் மறைவால் துயருறும் அவர் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
(44387)


# தீகவாபிப் பிரச்சினைக்கு தூபமிட்ட சக்திகளே துறைமுகத்திலும் குழப்பம்

## அஷ்ரப் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 29

தீகவாபி பிரச்சினையைக் கிளப்பி அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேட முயன்ற சக்திகளே கொழும்புத் துறைமுகத்திலும் குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு அத்தியாவசியச் சேவைகளை சீர்குலைக்க முயற்சிக்கின்றன.

துறைமுகங்கள், கப்பற்றுறை, புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டி உள்ளார்.

கொழும்பு கோட்டை, சோன இஸ்லாமிய கலாசார நிலையத்தில் இடம்பெற்ற வைபவத்திலேயே அவர் இப்படிக் கூறினார்.

இப்படியான பிற்போக்குச் சக்திகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

# ரூபா 1 கோடி நஷ்டஈடு கோரி ராவய பத்திரிகை மீது வழக்கு

## ஐ. தே. கட்சி எம். பி. முன்னறிவித்தல்

கொழும்பு, டிச. 29

'ராவய' பத்திரிகை மீது ஒருகோடி ரூபா நஷ்டஈடு கோரி ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா தமது சட்டத்தரணி மூலம் வழக்குக்கான அறிவித்தலை அனுப்பியுள்ளார்.

கடந்த மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் வவுனியாவுக்கு வைத்திய குழுவுடன் தாம் வந்த சமயம், அங்கு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 தமிழர்களைத் தம்முடன் கொழும்புக்கு அழைத்துச் சென்றதாக 'ராவய' கடந்த 10 ஆம் திகதி செய்தி வெளியிட்டது தொடர்பாகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட இருக்கிறது. (இ- 150- 3)

# இந்திய அணிக்குப் படுதோல்வி

டர்பன், டிச. 29

இந்தியாவுக்கும் தென் ஆபிரிக்காவுக்கும் இடையே டர்பன் நகரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணி 328 ஓட்டங்களால் சுலபமான வெற்றியைப் பெற்றது.

நேற்று 4 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களுடன் தனது 2 ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த தென் ஆபிரிக்கா 259 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

வெற்றிபெற 395 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது 2 ஆவது இன்னிங்சை ஆடிய இந்தியா 66 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இரு வாரங்களுக்கு முன்னர் இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணி இப்படி படுதோல்வியைத் தழுவியது அனைவருக்கும் ஆச்சரியத்தைத்தந்தது. (இ-10)

## திருமலை சந்தை குத்தகை!

# இணைப்பதிகாரிக்கு அதிகாரம் இல்லை

## தங்கத்துரை ஜனாதிபதிக்கு செய்தி

திருமலை மரக்கறிச் சந்தை குத்தகை விவகாரம் தொடர்பாக திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. தங்கத்துரை ஜனாதிபதிக்கு அவசர ''பாக்ஸ்'' செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

நகர சபைத் தலைவருக்குப் பணிப்புரை விடுக்கும் அதிகாரம் இராணுவ இணைப்பதிகாரிக்குக் கிடையாது என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை மரக்கறிச்சந்தையின் கேள்விப்பத்திரம் சட்டத்துக்கும் அவசரகால நடைமுறைகளுக்கும் ஏற்பவே திருமலை நகர சபைத் தலைவரால் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த கேள்விப்பத்திரத்தை இரத்துச் செய்ய இணைப்பதிகாரி கோரி இருப்பது நீதிக்கு முரணானது என்று அந்தச் செய்தியில் தங்கத்துரை தெரிவித்துள்ளார்.

இந்த குத்தகை ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் குலதுங்க நகர சபைத் தலைவர் பி. சூரியமூர்த்திக்கு உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே. (இ)

# சுவாமி விவேகானந்தர் சிலை கொழும்பில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், டிச. 29

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு நினைவாக சுவாமிகளின் வெண்கலச் சிலை கொழும்பு விவேகானந்தா சபையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஒன்பது அடி ஆறு அங்குலம் உயரமான சுவாமிகளின் சிலை இதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்தில் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி திறந்து வைக்கப்படும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண மடங்கள் அனைத்தினதும் உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜி மகராஜ் சுவாமி விவேகானந்தரின் சிலையைத் திறந்து வைப்பார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனும், கொழும்பில் உள்ள இந்து சமய நிறுவனங்களும் இணைந்து சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி பல நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

அந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே சுவாமியின் சிலை திறந்து வைக்கப்படவுள்ளதாக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஆத்மகனானந்தா தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தர் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார்.

சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு 24 - 1 - 1897 ஆம் ஆண்டில் விஜயம் செய்து, அடுத்த நாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் சொற்பெருக்காற்றினார். (அ)

### அளவு ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுள்ளது.

அந்த மகஜரின் சாராம்சம் வருமாறு:-

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் கொண்டுவரப்படும் பொருள்கள், காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களில் இறக்கப்படும் போது, அளவிலும், தொகையிலும் குறைவதனைத் தடுக்க உகந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

கப்பல் மூலம் தருவிக்கப்படும் பொருள்கள் குறைவது குறித்து அப்பணியில் ஈடுபட்டுள்ள எல்லா வர்த்தகர்களும் எமக்கு முறைப்பாடு செய்துள்ளார்கள்.

இது குறித்து யாழ். அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் இதுவரை தகுந்த தடுப்பு நடவடிக்கை இல்லை.

இந்த நிலை தொடருமானால், கொழும்பிலிருந்து பாவனைப் பொருள்களைத் தருவிக்கும் பணியை நிறுத்துவதைத் தவிர மாற்றுவழி எதுவும் தமக்கு இல்லை என்று எங்கள் அங்கத்தவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

எனவே இது விடயத்தை நீங்கள் கவனத்துக்கு எடுத்து எமது அங்கத்தவர்கள் பாவனைப் பொருள்களைக் கப்பல் மூலம் தருவிக்க வகை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். — என்று கேட்கப்பட்டுள்ளது, (அ)

### 23 அரசியல் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் 11 ஆம் திகதி வரை இந்த முக்கிய சாட்சிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. சி. எஸ். ஹமீட், முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாஸ, முன்னாள் இராணுவ தளபதி ஜெரிடி சில்வா, தற்போதைய இராணுவ தளபதி றொகான் தளுவத்த ஆகியோரும் அழைக்கப்பட்டவர்களில் சிலராவர். (இ-3-150)

### ஆசிரியர் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாறியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப் புறப்பாடசாலைகளில் இருந்தே இளைப்பாறியுள்ளனர்.

நகரப் பாடசாலைகளில் மேலதிகமான 4 ஆயிரம் பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளனர்.

அவர்கள் உடனடியாகக் கிராமப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (இ-150-3)

### தமிழ் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாக — இவர்கள் சிறைச்சாலை நிர்வாகத்தினருக்கும், தமது [illegible] படுத்தி உள்ளனர். (அ)

### தாண்டிக்குளம் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாசி ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ''செயின்''கள் பவுடர் ரின்களுக்குள் மறைத்து வைத்து எடுத்துச் செல்லப்பட்டன.

தி.நாகமுத்து என்பவரே கைதாகி உள்ளார். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org